


இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 27 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆவணி 20 – ஞாயிற்றுக்கிழமை 06 செப்டம்பர் 2026 – வெளியூர் 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 27 : Thiruvalluvar Year - 2057 - Aavani 20 - Sunday 06 September 2026 - Dak 10 Pages ₹ 5.00


## கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு இல்லத்தில் சோதனை: இந்தப்

# பூச்சாண்டிகளுக்கெல்லாம் அஞ்சிட மாட்டோம்!

## த.வெ.க. அரசுக்கு – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை!

**சென்னை, செப்.6-**

**கழக முதன்மைச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான கே.என்.நேரு அவர்கள் மீதான சோதனையை லஞ்ச ஒழிப்புத் துறை மேற்கொண்டு வரும் நிலையில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் “கழகமும், கே.என்.நேரு அவர்களும் புதிய அரசின் இத்தகைய பூச்சாண்டிகளுக்கெல்லாம் அஞ்சிட மாட்டோம்” என்று தமது கண்டனத்தைப் பதிவிட்டுள்ளார்.**

முதலமைச்சர் விஜய் தலைமையிலான த.வெ.க. அரசு பதவியேற்றது முதல், மக்கள் நலப்பணிகளில் கடுகளவுக் கூட கவனம் செலுத்தாமல் எதிர்க்கட்சிகளைப் பழிவாங்கும் நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. சட்டப் பேரவையில் அலறவிடும் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை, விஜயால் சமாளிக்க முடியவில்லை. இதனால் ஆத்திரமடைந்த விஜய், சட்டமன்ற கூட்டத்தொடர் தொடங்குவதற்கு முதல்நாளன்று எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களைக் கைது செய்து அவரை முடக்க நினைத்தார். இருப்பினும், நீதிமன்றத்தின் குட்டு காரணமாக, உதயநிதி ஸ்டாலின் விவகாரத்தில் த.வெ.க. அரசு பின்வாங்கியது.

இந்நிலையில், த.வெ.க. அரசின்



அரசியல் பழிவாங்கும் நடவடிக்கையாக முன்னாள் அமைச்சர் கே.என்.நேருவுக்குச் சொந்தமான இடங்களில் DVAC (லஞ்ச ஒழிப்புத் துறை) சோதனை நடத்தி வருகிறது. சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், த.வெ.க. அரசை நோக்கி அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பி வரும் நிலையில், அதனை திசை திருப்பும் வகையில் DVAC சோதனை நடத்தப்படுவதாக புகார் எழுந்துள்ளது.

இதேபோன்று, எதிர்க்கட்சி துணைத் தலைவர் கே.என்.நேரு உள்ளிட்டோரும் த.வெ.க. அமைச்சர்களுக்கு உடனுக்குடன் பதிலடி கொடுத்து வருவதால் அவரை முடக்கும் நோக்கிலும் DVAC சோதனையை த.வெ.க. அரசு ஒரு கருவியாகப் பயன்படுத்தி வருகிறது. அரசின் தோல்விகளை மூடிமறைக்க தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் உள்ளிட்டோர் மீது DVACஐ ஏவி விடுகிறது த.வெ.க. அரசு.

### திசை திருப்பவே சோதனை!

முதலமைச்சர் விஜய் எப்போதெல்லாம் பிரச்சனைகளில் சிக்கிக்கொள்கிறாரோ, அப்போதெல்லாம் தி.மு.க. மீது DVACஐ ஏவிவிடுகிறார் விஜய். சட்டப்பேரவையில் முதல்வர் விஜயின் செயல்பாடுகள் குறித்து சமூகவலைதளங்களில் கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளதால், அதனை திசைதிருப்ப DVAC சோதனை நடத்தப்படுவதாகவும் அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே முன்னாள் அமைச்சர்கள் எ.வ.வேலு, செந்தில்பாலாஜி தொடர்புடைய இடங்களில் DVACஐ ஏவிவிட்டு மக்கள் பிரச்சினைகளை திசைதிருப்ப முயற்சித்தது த.வெ.க. அரசு. மேலும், தி.மு.க.



எம்.எல்.ஏ.க்கள் அனிதா ராதாகிருஷ்ணன், மார்க்கண்டேயன் ஆகியோரைக் கைது செய்து நீதிமன்றத்தில் த.வெ.க. அரசு குட்டுவாங்கியது. அதேநேரம், அரசியல் பழிவாங்கும் நோக்கத்துடன், தி.மு.க. ஆட்சியில் ஊழல் என இதுவரை தொடரப்பட்ட ஒரு வழக்கில் கூட குற்றச்சாட்டுகளை நிரூபிக்க முடிந்ததில்லை என்பதே வரலாற்று உண்மையாகும்.

கழக முதன்மைச் செயலாளர் கே.என். நேரு இல்லத்தில் நடந்த சோதனை குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

**உயர்நீதிமன்றத்தில் வழக்கு நடந்து கொண்டிருக்கிறது; சட்டமன்றக் கூட்டத் தொடரும் நடந்துகொண்டிருக்கிறது.**

**இந்நிலையில், முழுக்க முழுக்க அரசியல் காரணங்களுக்காகவே கழக முதன்மைச் செயலாளர் சகோதரர் கே.என். நேரு அவர்கள் மீதான சோதனை நடவடிக்கையைத் த.வெ.க. அரசு மேற்கொண்டுள்ளது.**

### குதிரை பேரம்: வழக்குப் பதியாதது ஏன்?

**ஆட்சி அமைக்க மற்ற கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்களை ராஜினாமா செய்ய வைத்து, சட்டமன்ற வளாகத்திலேயே அவர்களைத் தம் கட்சியில் சேர்த்ததையும் குதிரை பேரம் நடத்தியதையும், அது தொடர்பான புகார்களில் லஞ்ச ஒழிப்புத்துறை முதல் தகவல் அறிக்கையைக் கூட பதியாததையும் தமிழ்நாட்டு மக்கள் நன்கறிவர்.**

**இந்திய ஜனநாயகத்தின் இருண்ட பக்கமாய் இந்தப் போக்கு தொடரும் நிலையில் வழக்கம்போல் திசைதிருப்பும் நடவடிக்கையைக் கையில் எடுத்துள்ளது இந்த ரீல்ஸ் அரசு.**

**கே.என்.நேரு அவர்களும், கழகமும் புதிய அரசின் இத்தகைய பூச்சாண்டிகளுக்கெல்லாம் அஞ்சிட மாட்டோம். சட்டத்தின் வழியில் அனைத்தையும் எதிர்கொண்டு வெல்வோம்!**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

---

## மேட்டூர் அணை திறப்புக்கு ரூ.6 கோடி செலவு!

# முதல்வர், கல்லணையை திறக்க வராமல் இருப்பதே நல்லது!

## தமிழ்நாடு காவிரி உழவர்கள் பாதுகாப்பு சங்கம் அறிக்கை!

*சென்னை, செப். 6 -*

மேட்டூர் அணையை திறப்பதற்கு 6 கோடி ரூபாய் செலவிடப்பட்ட செய்தியை கேட்டு உழவர்கள் மட்டுமல்லாமல், பொதுமக்களும் அதிர்ந்து போய் இருப்பதாக தமிழ்நாடு காவிரி உழவர்கள் பாதுகாப்பு சங்கம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, தமிழ்நாடு காவிரி உழவர்கள் பாதுகாப்பு சங்க நிர்வாகிகள், முதலமைச்சர் ஜோசப் விஜய்க்கு கடிதம் எழுதியுள்ளனர்.

அதில், முதலமைச்சர் மேட்டூர் அணையை திறக்க வரும்போது, கல்லணையையும் திறக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தாக தெரிவித்துள்ளனர்.

ஆனால், கடந்த 1ம் தேதி மேட்டூர் அணையை 6 கோடி ரூபாய் செலவிடப்பட்ட செய்தியை கேட்டு, அதிர்ந்துபோய் இருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். இவ்வளவு பெரிய தொகையை செலவிட்டு அணை திறக்கத்தான் வேண்டுமா என்ற நியாயமான கேள்வி எழுவதுடன், கல்லணை திறப்பிற்கு நீங்கள் வராமல் இருப்பதே சரி என படுவதாகவும் தெரிவித்துள்ளனர். சம்பா தாளடி பயிர்கள் சாகுபடிக்கு, கடந்த தி.மு.க. ஆட்சியில், சம்பா சிறப்பு தொகுப்பு திட்டங்கள் அறிவிக்கப்பட்டதை முதலமைச்சர் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும், சிறப்பு தொகுப்பு திட்டத்தை சட்டமன்றத்தில் விதி 110 கீழ் ஏக்கர் ஒன்றுக்கு, 8 ஆயிரம் ரூபாய் அறிவிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

சட்டமன்றத்தில் ஏற்கனவே அறிவித்த குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்திற்கு நிதி வழங்கப்பட்டு விட்டதாக தாங்கள் வெளியிட்டுள்ள தகவல் தவறானது என்றும், அந்த திட்டத் திற்காக அறிவிக்கப்பட்ட 4 ஆயிரம் ரூபாய், இன்னும் பல்லாயிரக்கணக்கான விவசாயிகளுக்கு வந்து சேரவில்லை என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், த.வெ.க. தேர்தல் அறிக்கையில் அறிவித்தபடி, நடப்பாண்டில், காவிரி சமவெளி மாவட்டங்கள் மட்டுமல்லாது தமிழ்நாடு முழுவதும் சம்பா தாளடி சாகுபடி மேற்கொள்கின்ற உழவர்களுக்கு சம்பா சிறப்பு தொகுப்பு திட்டத்தின் கீழ் ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 8 ஆயிரம் வீதம் பாரபட்சம் இல்லாமல் அனைத்து உழவர்களுக்கும் அறிவிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

---

## அமைச்சரின் வெற்றுப் பேச்சு!

# தூய்மைப் பணியாளர்களை தாக்கிய த.வெ.க. அரசு!

## பொய் கூறிய அமைச்சர் ஆதவ் அர்ஜூனா!

*சென்னை, செப். 6 -*

தூய்மைப்பணியாளர்கள் மீது ஒரு சிறு தாக்குதல்கூட நடத்தக்கூடாது என காவல்துறைக்கு உத்தரவிட்டவர் விஜய் என அமைச்சர் ஆதவ் அர்ஜுனா சம்பந்தப்பட்டவர்கள் முன்பே பொய் பேசியது அம்பலமாகியுள்ளது.

தொடர் போராட்டங்களில் ஈடுபட்ட தூய்மைப்பணியாளர் கடந்த மாதம் தலைமைச் செயலகத்தை முற்றுகையிட பேரணியாக செல்ல முற்பட்டனர்.

அவர்களை காவல் துறையினர் தடுத்து நிறுத்தி குண்டுக் கட்டாக கைது செய்தனர்.

இந்த நிகழ்வில், காவல்துறையினர் தூய்மைப் பணியாளர்களை கடுமையாக தாக்கிய நிலையில், சில தூய்மைப் பணியாளர்களுக்கு ரத்த காயம் கூட ஏற்பட்டது.

இதனிடையே, தூய்மைப்பணியாளர்களை த.வெ.க. அமைச்சர்கள் நேற்று முன்தினம் சந்தித்தனர்.

அப்போது தூய்மைப் பணியாளர்கள் முன் பேசிய அமைச்சர் ஆதவ் அர்ஜுனா,

தூய்மைப்பணியாளர்கள் மீது ஒரு சிறு தாக்குதல்கூட நிகழ்த்தக் கூடாது என காவல் துறைக்கு உத்தரவிட்டவர் விஜய் என்று பொய் பேசியது தற்போது அம்பலமாகியுள்ளது.

---

# மாவட்ட நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை 62 ஆக உயர்த்தவேண்டும்!

## உச்ச நீதிமன்றம் உத்தரவு!

*புதுடெல்லி, செப். 6 -*

உச்சநீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது 65ஆக உள்ள நிலையில், உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஓய்வு பெறும் வயது 62ஆக உள்ளது.

இதையடுத்து, நாடு முழுவதும் உள்ள மாவட்ட நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை 60லிருந்து 62ஆக உயர்த்த கோரி உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்ய காந்த் மற்றும் நீதிபதிகள் ஜாய்மால்யா பாக்ஷி மற்றும் வி.மோகனா அகியோர் விசாரித்த அமர்வு.,

சட்டீஸ்கர், கர்நாடகா, மத்தியபிரதேசம், மகாராஷ்டிரா, சிக்கிம், தமிழ்நாடு மற்றும் மேற்குவங்கம் ஆகிய 7 மாநிலங்கள் உயர் நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை 60லிருந்து 62ஆக உயர்த்த ஒப்பு கொண்டுள்ளன.

அதன்படி, இந்த 7 மாநிலங்களும், மார்ச் 31, 2023 அன்று அல்லது அதற்கு பிறகு ஓய்வு பெற்ற நீதிபதிகள் வேறெந்த பணிகளிலும் சேராத பட்சத்தில் மீண்டும் நீதிபதி பணியில் சேருவதற்கான வாய்ப்பு அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும்.

இந்த மாநிலங்கள் தங்கள் பணி விதிகளில் திருத்தம் செய்து, நீதிபதிகளின் ஓய்வு வயதை 62ஆக உயர்த்த வேண்டும். இத்தகைய திருத்தங்கள் கூடிய விரைவில், முன்னுரிமை அடிப்படையில் இரண்டு மாதங்களுக்குள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று உத்தரவிட்டனர்.

---

## முதல்வர் விஜய்யின் புதிய அலுவலகப் பணியில் பல்வேறு குளறுபடிகள்!

# ஒரே நிறுவனத்துக்கு 3 பிரிவுகளில் டெண்டர்!

## வலுக்கும் சந்தேகம்!

சென்னை, செப். 6 –

நாமக்கல் கவிஞர் மாளிகையில் அமைய உள்ள முதல்வர் விஜய்யின் புதிய அலுவலக பணிக்கான டெண்டரில், ஒரே நிறுவனம் மூன்று பிரிவுகளை கைப்பற்றியிருப்பது புதிய சர்ச்சையையும், சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

தினகரன் நாளேடு வெளியிட்டுள்ள செய்தியில்,

முதல்வர் விஜய்யின் புதிய அலுவலகத்தை, புனித ஜார்ஜ் கோட்டையின் பாரம்பரிய பிரதான கட்டிடத்தில் இருந்து நாமக்கல் கவிஞர் மாளிகையின் 10வது தளத்திற்கு மாற்றப்படும் என அறிவிக்கப்பட்டு, இப்பணிகளை மேற்கொள்ள 3 பிரிவுகளாக தனித் தனியாக டெண்டர்கள் கோரப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசு தரப்பில் இந்த மூன்று பிரிவுகளின் பணிகளுக்காக மொத்தம் 5 கோடியே 54 லட்சம் ரூபாய் திட்ட மதிப்பீடு நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், டெண்டர் இறுதி செய்யப்பட்டபோது சென்னையைச் சேர்ந்த குறிப்பிட்ட தனியார் நிறுவனம் ஒன்று, அரசு நிர்ணயித்த தொகையை விட 32 விழுக்காடு மிகக் குறைவாக, 3 கோடியே 78 லட்சம் ரூபாய்க்கு பணிகளை செய்து தருவதாகக் கோரி, 3 டெண்டர்களையும் மொத்தமாகக் கைப்பற்றியிருப்பது தற்போது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

ஒரே நிறுவனம் மூன்று பிரிவுகளையும் கைப்பற்றியிருப்பதும், மதிப்பீட்டை விட மிகக் குறைந்த விலைக்கு பணிகள் எடுக்கப்பட்டிருப்பதால் கட்டுமான தரம் பாதிக்கப்படுமா அல்லது பின்னாளில் கூடுதல் செலவு மதிப்பீடுகள் வருமா என்ற கேள்விகளை அரசியல் கட்சியினர் எழுப்புகின்றனர்.

முன்னதாக, இந்த விவகாரத்தில் ஏலம் திறக்கப் படுவதற்கு முன்பிருந்தே இந்த திட்டத்தின் மீது பலத்த குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

முறைப்படி டெண்டர் கோருவதற்கு முன்பாகவே, ஜுலை மாத இறுதியிலேயே நாமக்கல் கவிஞர் மாளிகை யின் 10வது தளத்தில் உடைப்பு மற்றும் சீரமைப்பு பணிகள் தொடங்கிவிட்டதாக எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டின.

நாளிதழ்களில் விளம்பரம் வந்த போதும், அரசு விதிகளின்படி இடெண்டர் தளத்தில் உடனே ஆவணங்கள் பதிவேற்றப்படவில்லை என முதல்வர் விஜய்யின் புதிய அலுவலகப் பணிக்கான டெண்டரில் பல்வேறு குளறுபடிகளை செய்து வருவது ஒன்றன்பின் ஒன்றாக அம்பலமாகி வருகிறது.